இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 21-06-2024

# கிராமத்திலிருந்து இலண்டனுக்கு...

“மாணவ - மாணவியரிடம் நான் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்...படியுங்கள். படியுங்கள். படியுங்கள். கல்வி ஒன்று தான் உங்களிடம் இருந்து யாராலும் திருட முடியாத ஒரே சொத்து. மாணவச் செல்வங்கள், படிப்பதற்கு சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதே திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை ஆகும். இலவச பஸ் பாஸ் முதல் காலை உணவுத் திட்டம் வரையில் பல்வேறு சலுகைகளை நாம் வழங்குவது இதனால்தான். கல்வி எனும் நீரோடை தடங்கல் இல்லாமல் பாய நமது அரசு உறுதுணையாக இருக்கும். கல்விச் சாலையில் தடங்கல் இன்றி, தயக்கம் இன்றி, அறிவை மூலதனமாகக் கொண்டு மாணவ, மாணவியர் கற்று மென்மேலும் உயர்வை அடைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல; உங்களது தந்தையாக வாழ்த்துகிறேன்” என்று அண்மையில் நடந்த பள்ளிக் கல்வித் துறை ஐம்பெரும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**இவை ஏதோ மேடைக்காகச் சொன்ன அலங்காரச் சொற்கள் அல்ல என்பதை மெய்ப்பிக்கிறார்கள் அந்த 25 மாணவ மாணவியர். தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இலண்டன் சென்று திரும்பி இருக்கிறார்கள். இவர்களை அழைத்துச் சென்றது தமிழ்நாடு அரசு. வசதி படைத்தவர் வீட்டுப் பிள்ளைகளாலோ, அல்லது மிகப்பெரிய நிறுவனங்களின் நன்கொடை மூலமாகவோ யாரோ சிலருக்குச் சாத்திய மாகி வந்ததை அரசுப் பள்ளி மாணவ, மாணவியருக்கும் கிடைக்கும் வகையில் கல்வி எனும் நீரோடையை கிராமத்துக்குள் திருப்பியதுதான் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றியாகும். மாண்புமிகு முதலமைச்சரின் வெற்றியாகும்.**

தமிழ்நாடு முதலமைச்சரின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டமும் பிரிட்டிஷ் கவுன்சிலும் இணைந்து 25 மாணவ, மாணவியரைத் தேர்வு செய்தார்கள். இவர்களுக்கு இங்கிலாந்தின் டர்ஹம் பல்கலைக்கழகத்தில் பயிற்சி தரப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்துப் பாராட்டி இருக்கிறார்கள். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மனமார நேரில் அழைத்துப் பாராட்டி இருக்கிறார்கள்.

‘நான் முதல்வன்’ திட்டமானது கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இதுவரை 20 லட்சம் மாணவர்கள் அந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெற்றுள்ளார்கள். மாணவர்களின் படிப்பை இது உயர்த்துகிறது. படித்த மாணவனுக்குத் தன்னம்பிக்கையையும் அறிவாற்றலையும் ஊட்டுகிறது இந்தத் திட்டம். எத்தனையோ நிறுவனங்கள் தங்களை இத்திட்டத்தில் இணைத்துக் கொண்டுள்ளன. அதில் பிரிட்டிஷ் கவுன்சிலும் ஒன்று. S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) என்பது இத்திட்டத்தின் பெயராகும். இதன்படி 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதில் 11 பேர் மாணவர்கள், 14 பேர் மாணவிகள். இவர்களுக்கு மேல் நிலைப் பயிற்சி லண்டனில் தரப்பட்டது. அனைத்துச் செலவுகளையும் அரசும் பிரிட்டிஷ் கவுன்சிலும் ஏற்றுக் கொண்டன.

**“முதல் தலைமுறை பட்டதாரி நான்.. எனக்காக செலவு பண்ற அம்மா அப்பா அவங்களுக்காக எதுவும் வாங்கியது இல்லை. ஊட்டியில் தேயிலை விவசாயி மகள் நான்.. பொருளாதாரம் பெருசா கிடையாது. ஊர் ஆயிரம் சொன்னாலும் காடு மலை தாண்டி படிக்க அனுப்புனது என்னோட அப்பாதான். அவரு பஸ் கண்டக்டர். அவருக்குக் கிடைத்த வேலை மூலமாகத்தான் ஓரளவு குடும்பம் நிலையாச்சு.. ஆனா காலத்துக்கும் பஸ் ஓட்டி காசு சேர்த்த அப்பா, நான் முதல் தடவையாக விமானத்துல ஏறிய போது ஆனந்த கண்ணீரோட நின்றார்” என்கிறார் ஒரு மாணவி.**

**“பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த எனக்கு சாதி ரீதியாக பிரிச்சு பேசிய ஊரு முன்னால் இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கிறேன் என் படிப்போட..” என்கிறார் ஒரு மாணவி.**

**“அம்மா டைலர். துணி தைத்து வரும் காசுதான் வாழ்வாதாரம். அப்பா கூலி வேலை. அரசுப் பள்ளியில்தான் 12 ஆவது வரைக்கும் படிச்சேன். இன்றைக்கு நானும் இந்த 25 பேரில் லண்டன் சென்று அரசுப் பள்ளி எதுக்கும் குறைஞ்சது இல்லை என்பதற்கு உதாரணமாக இருக்கிறேன்” என்கிறார் இன்னொரு மாணவர்.**

**“பொறியியல் படிக்க வேண்டும் என்பது என்னுடைய கனவு. ஆனால் படிக்க வைக்க வீட்டில் பணமில்லை. அரசுப் பள்ளியில் படித்து கல்லூரியில் சேர்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம் இருந்ததால்தான் நான் கல்லூரியில் சேர்ந்தேன். படித்தேன். அதன்பிறகு கல்லூரியில் எனக்கு ‘நான் முதல்வன்’ திட்டம் கிடைத்தது. இப்போது இலண்டன் வரைக்கும் போய் திரும்பி இருக்கிறேன்” என்கிறார் ஒரு மாணவி.**

“எனக்கு இனிமேல் பெரிய கம்பெனிகளில் வேலை கிடைக்கும்” என்கிறார் ஒரு மாணவர்.

“எனக்கு இனிமேல் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து அழைப்பு வரும்” என்கிறார் ஒரு மாணவர்.

மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு மாணவி சொன்னார்: “நான் இரண்டாம் ஆண்டு படிக்கும்போதே திருமணமாகி விட்டது. திருமணமாகி விட்டதால் உன்னால் முழுமையாக படிக்க முடியாது, இடையில் படிப்பை நிறுத்திவிடுவாய் என்று சொன்னார்கள். ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக இலண்டன் வரை சென்றுவிட்டு இந்த மேடையில் நான் நிற்பது அவர்களின் கேள்விக்கு விடையாக இருக்கும். இந்தளவுக்கு நான் உயரக் காரணமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி” என்று உருக்கமாகச் சொன்னார்.

**‘திராவிட மாடல்’ ஆட்சியின் இதயம் என்பது ‘எல்லோர்க்கும் எல்லாம்’ என்ற நோக்கம் கொண்ட இதுபோன்ற திட்டங்களில்தான் இருக்கிறது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.6.2024) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணித் தலைவர் செல்வராஜ் ஆகியோரின் மகன் திலீபன் – ஜனனி புதுமண தம்பதியினர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் – திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் மகன் எஸ்.கே.திலீபன் – ஆர்.ஜி.ஜனனி இணையரின் திருமணத்தை திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடத்தி வைத்தார். இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வபெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்ட அனைத்துக் கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

### ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

## திராவிட மாணவர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் ‘இந்தியா’ கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்று முழக்கம்!

சென்னை, ஜுன் 21-

திராவிட மாணவர் கழகம் சார்பில் ஒன்றிய அரசு ‘நீட்’டை ரத்து செய்ய வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 18.6.2024 அன்று மாலை 4 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

மருத்துவக் கல்வியில் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். நீட் உள்ளிட்ட எவ்வித நுழைவுத் தேர்வும் கூடாது என்று ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றிய தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

மேலும் நீட் தேர்வின் மோசடிகள், குளறுபடிகளை புள்ளிவிவரத் தகவல்களுடன் அம்பலப்படுத்தினார்கள். கிராமப்புற, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவச் செல்வங்கள் மருத்துவக்கல்வியை தடுக்கின்ற, தடை செய்வதே நீட் தேர்வின் நோக்கம் என்பதை எடுத்துக்காட்டி, மாணவர்களின் கல்வி உரிமை பறிப்பு, மாநில உரிமை பறிப்பு என நீட் தேர்வின் பெயரால் ஒன்றிய அரசின் அதிகார ஆணவத்தை எடுத்துக் காட்டி, அந்த உரிமைகளை மீட்பதில் தொடர்ச்சியாக போராடி வருகின்ற திராவிடர் கழகத்துடன் இணைந்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் வெற்றி பெறும்வரை போராடுவோம், வெற்றி பெறுவோம் என்று தலைவர்கள் உறுதிபட கூறினார்கள்.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு அமைந்த பிறகே நீட் தேர்வு திணிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வு கூடாது, நீட்டிலிருந்து விலக்கு அளிக்கின்ற தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதலை அளிக்க வேண்டும் என்றும் தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையில், நீட் தேர்வு எதிர்ப்புப்போராட்டத்தின் அடுத்த கட்டமாக நீட் எதிர்ப்பு இரு சக்கர வாகனப் பேரணிகள் 5 குழுக்களாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 11.7.2024 அன்று தொடங்கி கல்வி வள்ளல் பச்சைத்தமிழர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளான 15.7.2024 அன்று சேலத்தில் நிறைவு பெறும் என்றும், அனைத்துக்கட்சியினரும் நீட் எதிர்ப்பு இரு சக்கர வாகனப் பேரணிக்கு முழு ஆதரவை வழங்க வேண்டும் என்றும், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பொதுமக்களிடம் நீட் கூடாது என்பதற்கான விழிப்புணர்வை இந்த பேரணிமூலம் ஏற்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

திராவிட மாணவர் கழக மாநில பொறுப்பாளர்கள் செ.பெ.தொண்டறம், வி.தங்கமணி, நா.ஜீவா, த.சிவபாரதி, சு.இனியன், ச.மணிமொழி, மு.இராகுல், க.அறிவுச்சுடர், வெ.இளஞ்செழியன், பா.கவிபாரதி, சு.ச.திராவிடச் செல்வன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட மாணவர் கழக மருத்துவக் கல்லூரி மாநில அமைப்பாளர் ப.நீலன் வரவேற்றார்.

திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா. செந்தூர்பாண்டியன் தலைமையேற்று உரையாற்றினார்.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் தொடக்க உரையாற்றினார்.

கழகப் பொருளாளர் வீ.குமரேசன், பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா. பிரின்ஸ கஜேந்திரபாபு, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் எம்.எச். ஜவாஹிருல்லா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலப் பொதுச்செயலாளர் கே.ஏ.எம்.முகம்மது அபுபக்கர், மதிமுக கொள்கை விளக்க அணி மாநிலச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மத்தியக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எழுச்சித் தமிழர் முனைவர் தொல். திருமாவளவன், திமுக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கண்டன சிறப்புரை ஆற்றினார்.

“‘நீட்’ சமூகநீதியைச் சாகடிக்கும் கண்ணாடி” என்னும் ரூ. 5 மதிப்பிலான புத்தகம் 100 புத்தகங்கள் கொண்ட தொகுப்பை கி.வீரமணி அவர்களிடமிருந்து கழகத் தோழர்கள் உள்பட ஏராளமானவர்கள் பெற்றுக்கொண்டனர்.

கழக செயலவைத் தலைவர் வழக்குரைஞர் ஆ.வீரமார்த்தினி, நீலன், ஊமை. ஜெயராமன், அரூர் இராஜேந்திரன், மேலூர் எரிமலை, சேலம் பூபதி, தாம்பரம் ப.முத்தையன், எழிலன், ஈரோடு த.சண்முகம் உள்பட பலரும் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் இராபர்ட் புரூஸ், மேனாள் மாவட்ட நீதிபதி இரா.பரஞ்ஜோதி, தமிழ்நாடு சட்டமன்ற மேனாள் செயலாளர் மா. செல்வராஜ், கழக வெளியுறவுச் செயலாளர் கோ.கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, முனைவர் மஞ்சுளா செல்வம், விழிகள் வேணுகோபால், துணைப்பொதுச்செயலாளர் வழக்குரைஞர் சே. மெ.மதிவதனி, மகளிரணி மாநில செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் பா.மணியம்மை, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சோ.சுரேஷ். மாநில ப.க. துணைத் தலைவர் பொறியாளர் வேல்.சோ.நெடுமாறன், தலைமைக்கழக அமைப்பாளர்கள் வி.பன்னீர்செல்வம், தே.செ. கோபால் உள்பட கழகப் பொறுப்பாளர்கள், தி.மு.க., மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக்கட்சிகளின் பொறுப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

துணைப்பொதுச்செயலாளர் வழக்குரைஞர் ச. பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்கினார்.

திராவிட மாணவர் கழக சட்டக் கல்லூரி மாநில அமைப்பாளர் து.இளமாறன் நன்றி கூறினார்.

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் சிறப்புரை!

## புதுக்கோட்டை தெற்கு - திருமயத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா எம்.பி. - சூர்யா வெற்றிக் கொண்டான் - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜுன் 21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க திருமயம் தெற்கு, வடக்கு ஒன்றிய திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (22.06.2024, சனிக்கிழமை), மாலை 6.00 மணியளவில் அண்ணாசீரணி கலையரங்கம், திருமயத்தில், திருமயம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு.சிதம்பரம் தலைமையில் நடைபெறுகிறது. திருமயம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.கணேசன் வரவேற்புரையாற்றுகிறார்.

அ.சுப்பிரமணியன், மெ.இலக்குமணன், ராம. கருப்பையா, சித. ஆவுடையப்பன், பி.சரவணன், சே. சார்புதீன், அழ.மணிவாசகம், பி.எல்.கரிகாலன், சுப.செம்பையா, கு.ராமசாமி, சி. செல்வராணி, சுப.துரைராஜா, பி.கணேசன், முல்லை கே.ரமேஷ், வி. வெள்ளைச்சாமி பி.சரவணன், எஸ்.நவமணி, வேங்கி அரசன், எஸ். பாலசுப்பிரமணியன, ஏ.எல். முத்து, பி.எல்.சண்முகம், மு.சிக்கந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழக சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை, ஊழல் தடுப்புத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், கழக வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வுகளில் அறந்தாங்கி ராஜன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம். அப்துல்லா எம்.பி. த.சந்திரசேகரன், டாக்டர் ரகு. அண்ணாமலை, எம்.கோவிந்தசாமி, சி.இராமநாதன், ஞான.இளங்கோவன், க. அடைக்கலம், ஜெ. அபுதாஹிர், ஸ்ரீதேவி அண்ணாதுரை, பொன்.இராமலிங்கம்

அ.அடைக்கலமணி, அ.முத்து, வி.ஆர். இளையராஜா, எஸ்.ஜெயராமன், சீனி.பழனியப்பன், த.மணிராஜன், எம்.தேவி, இராம. மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, ஜெ.ஜான்பீட்டர், சே.இராஜமாணிக்கம், அருண் சேகர், ஆர்.எம்.கே. கார்த்திக் குமார், மு.பழனியப்பன், கே.ராஜன், டாக்டர் ஆர்.இராஜசேகரபாண்டியன், ஐ.சையது உசேன், கே.ஆர்.ஆனந்தன், சாமி. சுரேஷ், ஜி.சண்முகசுந்தரம், எம்.காத்தப்பன், ஏ.ஆர். சுரேஷ், ஆர்.அண்ணாத்துரை, ஆக்காட்டி ஆறுமுகம், எஸ்.மாரிமுத்து, ஆறு. பாலகிருஷ்ணன், தி.ராமசாமி, மு.ஆனந்த குமார், கா.பொற்செல்வன், சி. சந்திரன், அய்யாச்சாமி, ஏ.செந்தில்குமார், ஏ. வி.எம்.வெள்ளைச்சாமி, எஸ்.சோமையா, ஏ.பழனிவேலு, எஸ். சபரிராஜன், கே.ஆர்.மாணிக்கம், எஸ்.சுதாகர், ஜெ.அழகுச்செல்வி, ஆர்.வெண்ணிலா, வி.கண்ணன், சி.பரிமளர மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தெற்கு மாவட்ட தலைவர் ஜெ.ஜான் பீட்டர் நன்றி கூறுகிறார்.